



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க. சுந்தர் தலைமையில் டி.மோகன்தாஸ் வரவேற்புரையில் நடைபெற்ற இடைக்கழிநாடு பேரூராட்சி மன்ற உறுப்பினர் பொறியாளர் பெ.பிரபு (ஏ) ஜெயலட்சுமணன் இல்ல விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சி.வி.எம்.பி. எழிலரசன், பனையூர் மு.பாபு, மருத்துவர் ஆர்.டி. அரசு, ப. அப்துல்மாலிக், ச. இனியரசு , சங்கர், சு.க. ஆதவன் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். இதில் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் பங்கேற்று சிறப்பித்தனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியம் திமுக சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா கூடப்பாக்கத்தில் ஒன்றியச் செயலாளர் டி.தேசிங்கு தலைமையில் நடைபெற்றது இதில் மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தண்ணீர் பந்தலை திறந்து வைத்து இளநீர் மோர் குளிர்பானங்கள் பழம் வகைகள் உள்ளிட்ட பொருட்களை வழங்கினார் உடன் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ணசாமி, கெ.ஜெ.ரமேஷ், ம.ராஜி , டி.முரளி கிருஷ்ணன், எஸ்.மூர்த்தி, பரமேஸ்வரி கந்தன், இளைஞர் அணி கே.சுரேஷ்குமார் , எம்.மோகன், பெ.வினோத், இ.கந்தபாபு, சி.அண்ணாகுமார், ஜெ.சாக்ரடீஸ், சுமதிவிஜயகுமார், எம்.குணசேகரன், ப. கந்தன், ஜி.சி.சி.கருணாநிதி, ஜி.பிரவீன் குமார், ஜி.பி.பரணிதரன், இ.வி.பி.பிரதீப், மணிவண்ணன், ஹரிஹரன், சிபி, மு.தே.ராஜேஷ், கே.என்.சுப்பிரமணி, உள்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள்.

## கடலூர் கிழக்கு மாவட்டம் முழுவதும்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளை சிறப்பாகக் கொண்டாடுவோம்!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

கடலூர், மே.18-

கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம், 16-05-2026, அன்று மாலை, காட்டுமன்னார் கோயில், எம்.ஆர்.கே அரங்கத்தில், தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைப்பெற்றது.

கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர்,குறிஞ்சிப்பாடி சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார்.

கழக பொறியாளர் அணித்தலைவர் துரை.கி.சரவணன், தொகுதி பார்வையாளர்கள் விஜயன் ராமகிருஷ்ணன், அ.பாரிபாலன்,எம்.கே.சிவா, மாவட்டப்பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், மாவட்ட கழக துணை செயலாளர்கள் அ.ஞானமுத்து, ஆர்.சக்திவேல், சுதா சம்பத் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் கீழ்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு முன்னாள்



முதலமைச்சர், முத்த மிழறிஞர் கலைஞர் அவர்களின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, 3-ம் தேதி கடலூர் கிழக்கு மாவட்ட கழகம் சார்பில் மாவட்டம், மாநகரம், ஒன்றியம்,நகர, பகுதி, பேரூர்க் கழகம் சார்பில் கழக கொடியேற்றியும், நலத் திட்ட உதவிகள் வழங்கியும்,கல்வி உபகரணங்கள் வழங்கியும், ஏழை எளியோருக்கு உணவு வழங்கியும் சிறப்பாக கொண்டாட வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை எதிர்கட்சி தலைவராக நியமித்த கழக தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம்.

கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள சட்டமன்ற தொகுதிகளில் கழகம் மற்றும் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களுக்கு வாக்களித்த மக்களுக்கும், களப்பணியாற்றிய கழக நிர்வாகிகள்,சார்பு அணி நிர்வாகிகள், கூட்டணி கட்சி தோழர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

கழக தலைவர் தளபதி அவர்கள் தலைமையில் சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தல் முடிவுகள் குறித்து தொகுதிவாரியாக கள ஆய்வு செய்ய குழு அமைக்கப்பட்டுள்ளது. கடலூர் மாவட்டத்திற்கு கள ஆய்வுக் குழுவினர் வருகையின் போது தேவையான ஏற்பாடுகளையும் ஒத்துழைப்பையும் மாவட்ட செயலாளர் அவர்களின் தலைமையில் விவரங்களையும் மாநகர, நகர , ஒன்றிய, பேரூர் செயலாளர்களுடன் தொகுதி பார்வையாளர்களுடன் அளிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது,. என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்நிகழ்வில்; ஒன்றிய கழக செயலாளர்கள்: அ.முத்துசாமி, வி.சிவக்குமார், தங்க. ஆனந்தன்,

த.ஜெயபாண்டியன், கே.ஆர்.ராயர், ஆர்.நாராயணசாமி, கே.ஆர்.கே. கோவிந்தராஜ், எஸ்.செந்தில்குமார், தெ.காசிராஜன், பி.சுப்பிரமணியன், பா.திருமாவளவன், கே.ஆர்.தனஞ்செயன், ஆர்.விஜயசுந்தரம், , ஏ.எஸ். மதியழகன், பி.சுந்தர பாண்டியன்,

ஏ.எம்.மதியழகன், மு.வெற்றிவேல், வி.ஜி.பி.சபா நாயகம், டி.திருமூர்த்தி, வி.பி.பாலு, ஆர். கலையரசன், எம்.மனோகரன், த.சங்கர், ஆர்.ராஜேந்திரன், கே.நடராஜன், ம. சோழன், வி.கோவிந்தசாமி, கே.மகேஷ்,

கடலூர் மாநகர செயலாளர்: கே.எஸ்.ராஜா,கடலூர் பகுதி செயலாளர்கள்: மு.இளையராஜா,

நகர கழக செயலாளர் த.தமிழ்ச்செல்வன், நகர மன்றத் தலைவர் எஸ்.சிவக்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: வி. ஞானசேகரன், வெ. விக்கரமன், பொதுக்குழு உறுப்பினர்கள்: கே.பி.ஆர்.பாலமுருகன், என்.டி.கணேசன், பா.கோதண்டபாணி, மஞ்சு

மாவட்ட தொகுதி பார்வையாளர்கள் ஆசிரியர் பி.வெங்கடாஜலபதி,ஆசிரியர் சின்னமணி,தருமர்.பழனிசாமி,

பேரூர் செயலாளர்கள்: எஸ்.கணேசமூர்த்தி, கு.வே.ப.ஜெய்சங்கர், க.பழனி, ப.மனோகரன், கே.ஜெயச்சந்திரன், கே.சுரேஷ், தேன்மொழி சங்கர், சார்பு அணி நிர்வாகிகள் தொண்டரணி ஆராமுது, விவசாய அணி பொன்.பன்னீர்செல்வம், தொமுச பழனிவேல்,

மகளிர் அணி த.அமுதராணி,மகளிர் தொண்டரணி ப.மனோரஞ்சிதம், பொறியாளர் அணி அப்பு. சந்திரசேகர், வழக்கறிஞர் அணி பி.அருள்ஜோதி, நெசவாளர் அணி ப.நல்லதம்பி, ஆதிதிஆரவிடர் நலக்குழு ஆர்.பரந்தாமன்,

சிறுபான்மை நலபிரிவு எம்.எஸ்.முகமது யூனஸ், வர்த்தகர் அணி ஆர்.ரெங்கநாதன்,

தகவல் தொழில்நுட்ப அணி ஏ.ஜாபர் அலி, விளையாட்டு மேம்பாட்டு அணி பூ.சதீஷ்குமார், மீனவர் அணி வீ.செல்வபாரதி, அயலக அணி விசுவராஜ், அமைப்பு சாரா ஓட்டுநர் அணி தாணூர் சிவ க்கொழுந்து உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


# திரைப்படத் தயாரிப்பாளர் - நடிகர் கே.ராஜன் மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, மே.18-**

**திரைப்படத் தயாரிப்பாளரும் நடிகருமான கே.ராஜன் அவர்கள் நேற்று மறைவுற்றார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

**அன்னாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தி வருமாறு :-**



திரைப்படத் தயாரிப்பாளரும் நடிகருமான திரு.கே.ராஜன் அவர்கள் தற்கொலை செய்துகொண்டு உயிரிழந்தார் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன். அவரது மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரைத்துறையின் முன்னேற்றத்திற்காகவும் சிறு தயாரிப்பாளர்களின் நலனுக்காகவும் எப்போதும் துணிச்சலுடன் குரல் கொடுத்து வந்தவர் ராஜன் அவர்கள்.

திரைப்பணியோடு கல்விப் பணியும் ஆற்றியவர். தமிழ்த் திரைப்படங்களுக்குத் தமிழிலேயே தலைப்பு வைக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்தவர்.

தனிப்பட்ட முறையில் என்மீது மிகவும் அன்பு செலுத்திய ராஜன் அவர்கள், தனது பேச்சில் எப்போதும் திரைத்துறையின் அடித்தளத்தில் பணியாற்றும் தொழிலாளர்களின் நலனை முன்னிறுத்தியே பேசுவார்.

அன்னாரை இழந்து வாடும் கலைத்துறையினருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் இந்தத் துயரத்தைத் தாங்கும் வலிமை கிடைக்கட்டும். அவர்களுக்கு எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அந்த இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## விழுப்புரத்தில் மூடுவதாகக் கூறப்பட்ட

# டாஸ்மாக் கடைக்கு பெட்டி, பெட்டியாக வந்த மதுபாட்டில்கள்!

## பொதுமக்கள் அதிர்ச்சி!

விழுப்புரம், மே.18-

விழுப்புரத்தில் தமிழ்நாடு அரசு மூடுவதாக அரசாணை வெளியிட்ட டாஸ்மாக் கடைக்கு லாரியில் மது பாட்டில்கள் பெட்டி, பெட்டியாக நேற்று கொண்டு வந்து இறக்கி வைக்கப்பட்டதால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

தமிழ்நாட்டில் புதிதாக பொறுப்பேற்ற தவெக அரசு கடந்த சில நாட்களுக்கு முன் தமிழ்நாடு முழுவதும் வழிபாட்டுத் தலங்கள், கல்வி நிறுவனங்கள், பேருந்து நிறுத்தங்கள் உள்ளிட்ட பகுதிகளில் இயங்கும் டாஸ்மாக் கடைகள் கணக்கெடுக்கப்பட்டு 717 டாஸ்மாக் கடைகள் மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்கான அரசாணையும் வெளியிடப்பட்டது.

அதன்படி விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 11 கடைகள் மூடுவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் இந்த பட்டியலில் வழிபாட்டுத்தலங்கள், பேருந்து நிறுத்தம் உள்ளிட்ட மக்கள் புகார் கூறிய இடங்களில் உள்ள டாஸ்மாக் கடைகள் மூடவில்லை என்ற அதிருப்தியும் எழுந்தது. இதுபோல், விழுப்புரம் நகரில் ரயில் நிலைய பேருந்து நிறுத்தம் அருகே உள்ள டாஸ்மாக் கடையால் தொடர்ந்து போக்குவரத்து நெரிசலும், அப்பகுதியில் உள்ள கல்வி நிறுவனங்கள், குடியிருப்பு வாசிகள் பாதிக்கப்பட்டு வந்தனர். தற்போது இந்த கடை மூடப்படுவதாக அரசாணை வெளியிட்டதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். இந்த அறிவிப்பு வந்த மறு நாளே கடைகளில் மது வாங்குவதற்காக குடிமகன்களும் படையெடுத்தனர். கடையில் உள்ள சரக்கு தீரும் வரை கடை செயல்படும், அதன் பிறகு தான் மூடப்படும் என்று ஊழியர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் கடையில் உள்ள சரக்கு அனைத்தும் காலியான நிலையில் நேற்று லாரியில் பெட்டி, பெட்டியாக பீர், பிராந்தி உள்ளிட்ட மது பாட்டில்கள் கொண்டு வந்து இறக்கி வைக்கப்பட்டுள்ளது. இதனைப் பார்த்த பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். கடையில் சரக்கு தீர்ந்ததும் சீல் வைப்பார்கள் என்று கூறிய நிலையில் மீண்டும் லாரியில் பெட்டி பெட்டியாக மதுபாட்டில் வந்து இறங்குவது உண்மையிலேயே தமிழ்நாடு அரசு கூறியபடி இந்த டாஸ்மாக் கடை மூடப்படுமா? அல்லது கண்துடைப்பா? என கேள்வி எழுப்பி உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# இர. செங்குட்டுவன்

### மே 18 (2021)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்ற தொடங்கியவர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கிளைச் செயலாளராகவும், சித்தாமூர் ஒன்றிய பொறுப்பாளராகவும், மாவட்ட கலை,இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

கொளத்தூர் ஊராட்சி மன்றத் தலைவராகவும், சித்தாமூர் ஒன்றியக்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இந்தி திணிப்பு எதிர்ப்பு போராட்டம், ஈழத்தமிழர் ஆதரவு போராட்டம் என பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# ஏ. கோவிந்தசாமி

### மே 18 (1969)



மொழிப்போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர். 1952ல் தி.மு.க. ஆதரவோடு போட்டியிட்டு விக்கிரவாண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினரானார்.

கழகம் நடத்திய மும்முனைப் போராட்டத்தில் முன்னணித் தலைவர்கள் அனைவரும் கைதாகி சிறை சென்றபோது, அண்ணா அவர்களால் கழக பொறுப்பாளராக நியமனம் செய்யப்பட்டவர்.

தி.மு.க. தொழிற்சங்கச் செயலாளராகப் பணியாற்றியவர்.

அண்ணா அவர்களின் நம்பிக்கைக்கு உரியவரானார். தலைவர் கலைஞரின் உற்ற நண்பராக விளங்கியவர்.

1967ல் அண்ணா அமைச்சரவையிலும், அண்ணா மறைவுக்குப் பிறகு தலைவர் கலைஞர் அமைச்சரவையிலும் பணியாற்றியவர்.

“கொள்கை குன்றம் கோவிந்தசாமி” என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.